**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**
**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108531

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: லஞ்ச ஒ.த.பிரிவு காவல்நிலையம் | Year: 2022 ஆண்டு | FIR No.: 2/2022/AC/TPR மு.த.அ. எண் | Date: 27.01.2022 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 26.08.2021 | Date to : நாள் வரை 27.01.2022
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை சுமார் 08.00 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.01.2022 | Time : நேரம் 11.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.01.2022 | Time : நேரம் 11.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 32 கி.மீ தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், காங்கேயம், திருப்பூர் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. கேசவன்
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : A. செந்தில்வேல் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 50 years நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 270/1, வேலாயுதம்பாளையம், பாண்டு-வாநிதபுரம், அத்தூர் கிராமம், புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. சிவகாமி, வட்டாட்சியர், காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/1/22      27.01.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27.01.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. சசிலேகா
Rank: நிலை காவல் ஆய்வாளர்
உ.த.க. பிரிவு,
திருப்பூர்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 2/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 27.01.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது S.கேசவன்- வயது 50, த/பெ.செந்தில்வேல், 270/1, வேலாயுதம்பாளையம், பாண்டுலிங்கபுரம், அஞ்சூர் கிராமம், புகளூர் தாலூகா, கரூர்மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர் S.கேசவன்- வயது 50 த/பெ. செந்தில்வேல், 270/1, வேலாயுதம்பாளையம் பாண்டுலிங்கபுரம் அஞ்சூர் கிராமம், புகளூர் தாலூகா, கரூர் மாவட்டம். செல் நம்பர் 9842306418 பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர் மாவட்டம். நான் கரூர் மாவட்டம் புகளூர் தாலுகா, அஞ்சூர் கிராமம், பாண்டு லிங்கபுரம் கதவு எண் 270/1 வேலாயுதம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். நானும் எனது உறவினர் ஆறுமுகம் மகன் சதாசிவம் என்பவரும் பார்ட்னராக சேர்ந்து அரசாங்க காண்ட்ராக்ட் வேலைகளை எடுத்து செய்ய முடிவு செய்தோம். அதற்கு செல்வநிலை சான்றிதழ் தேவைப்பட்டது. எனக்கு நிலங்கள் குறைவாக இருந்ததால் எனது உறவினர் சதாசிவத்தின் நிலங்களை ஆவணங்களாக காண்பித்து செல்வநிலை சான்றிதழ் வாங்க முடிவு செய்தோம். அதன்படி திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டம், சின்னமுத்தூர் கிராமத்தில் சதாசிவத்திற்கு சொந்தமான க.ச.எண். 167/3 ல் உள்ள 0.21 ஹெக்டேர் க.ச.எண் 167/5-ல் உள்ள 1.60 ஹெக்டேர் ஆகிய நில ஆவணங்களை காண்பித்து செல்வநிலைச் சான்றிதழ் வாங்க முடிவு செய்தோம். அதன்படி நானும் சதாசிவமும் கடந்த 26.08.2021 தேதி திருப்பூர் மாவட்டம் காங்கயம் தாலூகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்று செல்வநிலைச் சான்றிதழ் கேட்டு நில ஆவணங்களுடன் ஆன்லைனில் சதாசிவம் பெயரில் விண்ணப்பம் செய்தோம். அதன்பின்னர் அன்றே நானும் சதாசிவமும் காங்கயம் தாலூகா அலுவலகம் சென்று தாசில்தார் திருமதி.சிவகாமி அவர்களை நேரில் பார்த்து செல்வநிலை சான்றிதழ் கேட்டு ஆன்லைனில் விண்ணப்பித்த விபரங்களை தெரிவித்தோம். மேற்படி சொத்தின் மதிப்பு ரூபாய் 75 லட்சம் இருக்கும் என்று சொல்லி அதற்கு செல்வநிலை சான்றிதழ் கேட்டோம். அதற்கு அவர் சான்றிதழ் போட்டு தருகிறேன் என்றும்,

அதற்கு தனக்கு 2 பர்சண்டேஜ் லஞ்சமாக ரூபாய் 1.5 லட்சம் தர வேண்டும் என்று கேட்டார். அப்போது நாங்கள் இன்னும் தொழிலையே ஆரம்பிக்கவில்லை. பணம் எங்கிருந்து கொடுப்பது என்று சொன்னோம். அதற்கு அவர் நீங்கள் பெரிய தொழில் செய்யப்போகிறீர்கள். கொஞ்சம் பார்த்து கவனியுங்க என்று சொன்னார். அப்போது எனது மற்றும் சதாசிவத்தின் செல்போன் எண்ணை வாங்கிகொண்டார். பிறகு நாங்கள் அங்கிருந்து வந்து விட்டோம். அதன் பின்னர் விவசாய வேலைகளை கவனித்து கொண்டிருந்ததால் நாங்கள் இருவரும் தாலூகா அலுவலகத்திற்கு செல்லவில்லை. விண்ணப்பம் செய்து 4 மாதங்களாகியும் எங்களுக்கு சான்றிதழ் கிடைக்காததால் கடந்த வருடம் டிசம்பர் மாத இறுதியில் நானும் சதாசிவமும் தாலூகாஅலுவலகம் சென்று மேற்படி தாசில்தார் சிவகாமி அவர்களை பார்த்து சான்றிதழ் சம்மந்தமாக கேட்டோம். அதற்கு அவர் நான் சொன்ன பணத்தை ரெடி பண்ணிட்டிங்களா என்று கேட்டுவிட்டு இவ்வளவு நாளாக நீங்கள் ஏன் வந்து பார்க்கவில்லை உங்கள் பைலை இவ்வளவு நாள் வைக்க முடியாது. எனக்கு ஜனவரி மாதத்திற்குள் டிரான்ஸ்பர் வந்து விடும். அதனால் உங்களுக்கு சான்றிதழ் தேவையில்லை என்று ரிஜக்ட் பண்ணி விடுவேன் என்று சொன்னார். அதற்கு நாங்கள் விவசாய வேலைகளை கவனித்து கொண்டிருந்ததால் வரமுடியவில்லை பணத்திற்கும் ரொம்ப சிரமமாக இருக்கிறது, பணத்தை ரெடி பண்ண முடியவில்லை என்று சொன்னோம். அதற்கு அவர் ரூ.70,000/- கொடுங்கள் நான் டிரான்ஸ்பர் செல்வதற்குள் வேலையை முடித்து கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நாங்கள் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வந்து விட்டோம். இந்நிலையில் 20.01.2022 தேதி காலை சதாசிவத்தின் செல்போனுக்கு தாசில்தார் அவர்கள் தொடர்பு கொண்டுள்ளார். சதாசிவம் போனை எடுக்க வில்லை. அன்றைய தினம் மாலை சதாசிவம் என்னிடம் தாசில்தார் செல்போனில் அழைத்த விபரத்தை தெரிவித்தார். நான் தாசில்தார் அவர்களுக்கு எனது செல்போனிலிருந்து தொடர்பு கொண்டு சதாசிவத்திடம் பேசக்கொடுத்தேன். சதாசிவம் தாசில்தார் அவர்களிடம் பேசியபோது தாசில்தார் அவர்கள் தான் கேட்ட பணத்தை ரெடி பண்ணிவிட்டீர்களா என்று கேட்டதாகவும் பணத்தை ரெடிபண்ண முடியவில்லை என்று சொன்னதற்கு அவர் ரூ.60,000/- வது ரெடிபண்ணி சீக்கிரம் கொண்டு வந்து கொடுங்கள் போட்டு தருகிறேன் என்று சொன்னதாகவும் கூறினார். இதன் தொடர்ச்சியாக 25.01.2022 தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் தாசில்தார் அவர்கள் மீண்டும் சதாசிவத்தின் செல்போனுக்கு தொடர்பு கொண்டு ஏன் வரவில்லை நான் கேட்ட பணத்தை கொடுத்துவிடுங்கள் நான் சர்டிபிகேட் போட்டு கொடுத்துடறேன் என்று சொன்னதாகவும்,

அதற்கு சதாசிவம் தான் வெளி வேலையாக போய்விட்டேன் என்று சொல்லி என்னை அனுப்புவதாக பேசி போனை வைத்து விட்டதாக சொன்னார். அதன்பின்னர் இன்று 27.01.2022 ஆம் தேதி காலை சுமார் 8 மணியளவில் தாசில்தார் அவர்கள் சதாசிவம் செல்போனுக்கு தொடர்புகொண்டு தேர்தல்தேதி அறிவித்துவிட்டார்கள் சீக்கரமாக வாருங்கள் என்று சொன்னதாக சொன்னார். அதற்கு சதாசிவம் என்னை சீக்கரம் அனுப்புவதாக சொல்லியுள்ளார். நானும் எனது உறவினர் சதாசிவமும் பார்ட்னராக செய்ய உள்ள வேலைக்கு சதாசிவம் பெயரில் ரூ.75,00,000/- மதிப்பில் செல்வநிலைச் சான்றிதழ் வழங்க தாசில்தார் திருமதி சிவகாமி அவர்களுக்காக லஞ்சமாக கேட்ட ரூ.60,000/- பணம் கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd/-xxxx S.Kesavan 27/1/22 Sir, Received the complaint on 27.01.2022 at 11.00 hrs and conducted enquiry between 11.00 hrs to 11.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.2/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 at 11.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 27.01.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.S.Kesavan (50), S/o.Senthilvel, 270/1, Velayuthampalayam, Pandulingapuram, Anjur Village, Pugalur Taluk, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

K.Sasilekha 27.01.2022

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.